| பாடம் | தமிழ்மொழி | திகதி | |
|---|---|---|---|

| தலைப்பு | இலக்கணம் –வலிமிகும் இடங்கள் |
|---|---|
| க.தரம் | 5.8 வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| உ.தரம் | 5.8.3 அங்கு , இங்கு ,எங்கு என்பவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

அ. பாடப்பகுதி பக்கம் 135 வாசிக்கவும்
ஆ. வலிமிகும் இடங்களை அறியவும் .
இ. பயிற்சிகளைச் செய்து படம் அனுப்பவும் .

https://bit.ly/3lwe9Gw
பக்கம் 135

## வலிமிகும் இடங்களை அறிக.

1. அறிவழகன் கடைக்குச் சென்றான். சில அழகிய பொம்மைகளை அங்கு+கண்டான்.
**அங்குக் கண்டான்**

2. பல வண்ண பொம்மைகளை இங்கு+பார்க்கலாம் என்று கடைக்காரர் கூறினார்.
**இங்குப் பார்க்கலாம்**

3. எங்கு+தேடியும் இதுபோன்ற பொம்மைகள் எனக்குக் கிடைக்கவில்லை என்று கடைக்காரரிடம் சொன்னான்.
**எங்குத் தேடியும்**

வலிமிகும் இடங்களை அறிந்து சேர்த்தெழுதுக.

பள்ளி விடுமுறை நாளில் நண்பர்கள் மூவரும் அங்கு+கூடினர். எங்கு+பார்த்தாலும் பசுமையாக இருந்தது. அங்கு+பெரிய ஆலமரங்கள் சில இருந்தன. நண்பர்கள் மூவரும் எங்கு+செல்ல நினைத்தனரோ அவ்விடத்தை வந்தடைந்தனர்.

முதலில் அங்கு+கூடாரம் ஒன்றனை அமைத்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு அருகிலுள்ள ஆற்றில் குளித்தனர். அங்கு+சிறிய மீன்களைப் பிடித்தனர். "வாருங்கள் இங்கு+சிதறிய குப்பைகளை அகற்றுவோம்," என்றான் நண்பர்களில் ஒருவன். மூவருமாகச் சேர்ந்து அங்கு+கிடந்த குப்பைக் கூளங்களைச் சுத்தம் செய்தனர். அங்கு +பிடித்த மீன்களைப் பங்கிட்டு எடுத்துக் கொண்டு களிப்புடன் வீடு திரும்பினர்.

LIVEWORKSHEETS